©
GOVERNMENT OF TAMIL NADU
2018

[Regd. No. TN/CCN/467/2012-14
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 15] CHENNAI, WEDNESDAY, APRIL 11 , 2018
Panguni 28, Hevilambi, Thiruvalluvar Aandu–2049

## Part III—Section 1(a)

**General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | | Pages. |
|---|---|---|
| TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENT DEPARTMENT | | |
| Amendment to the Religious Institutions (Lease of Immovable Property) Rules | .. | 36-37 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENT DEPARTMENT

**Amendment to the Religious Institutions (Lease of Immovable Property) Rules.**

*[G.O. Ms. No. 73, Tourism, Culture and Religious Endowment (RE4-2), 28th March 2018, பங்குனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No. SRO A-15/2018.— In exercise of the powers conferred by sub-section (1) read with clause (xiii) of sub-section (2) of Section 116 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Religious Institutions (Lease of Immovable Property) Rules,1963:-

AMENDMENT

In the said Rules, in rule 5, in clause (viii), for the expression, "other objectionable trade or business.", the expression "other objectionable trade or business **contrary to the Hindu religious sentiments**" shall be substituted.

EXPLANATORY NOTE

The Religious Institutions (Lease of Immovable Property) Rules, 1963 prescribe conditions for lease of properties and rights of religious institutions. Rule 5 of the said Rules prescribed the particulars to be furnished in the auction notice. Since the conditions for Lease were prescribed long ago, amendments have been issued with G.O.(Ms).No.155, Tamil Development, Culture and Religious Endowments Department, dated 28-07-2006 clause (viii) of rule 5 of the said Rules, as amended by the said Government Order provides that the shops and buildings shall not be leased out to run liquor shops, mutton shops *or any other objectionable trade or business.*

2. In the Eleventh report of the Committee on Delegated Legislation (Thirteenth Assembly), the Committee has suggested to consider, whether the expression, "contrary to the Hindu Religious Sentiments", be included after the term, "objectionable trade or business" in the above said clause. The said suggestion of the Committee has been considered by the Government and it is decided to amend the existing rule accordingly.

3. The Notification is intended to give effect to the above decision.

**அறிவிக்கை**

**1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் **(**தமிழ்நாடு சட்டம் **22/1959)** பிரிவு **116,** உட்பிரிவு **(1)** மற்றும் உட்பிரிவு **(2)** கூறு (xiii)-ல் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் **1963–**ஆம் ஆண்டு சமய நிறுவனங்கள் **(**அசையா சொத்துக்கள் குத்தகைக்கு விடுதல்**)** விதிகளுக்கு பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்**.**

**திருத்தங்கள்**

*மேற்சொன்ன விதிகளில், விதி 5 கூறு (viii)–ல்* மறுக்கத்தக்க வேறு வர்த்தகத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு குத்தகைக்கு விடக்கூடாது'' என்ற கூற்றிற்கு பதிலாக ''இந்து சமய உணர்வுகளுக்கு மாறான, மறுக்கத்தக்க வேறு வர்த்தகத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு *குத்தகைக்கு விடக்கூடாது*'' என்ற கூற்று மாற்றீடு செய்யப்பட வேண்டும்**.**

**விளக்கக் குறிப்பு**

சமய நிறுவனங்கள் (அசையா சொத்துக்கள் குத்தகைக்கு விடுதல்) விதிகள், **1963–**ல் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் சமய நிறுவனங்களின் உரிமைகள் தொடர்பாக விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் விதி **5–**ல் ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட வேண்டிய விவரங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதி வகுத்து பல ஆண்டுகள் கடந்த நிலையில் மேற்காணும் விதிக்கு, அரசாணை (நிலை) எண் **155**, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை, நாள் **28–7–2006–**ல் திருத்தங்கள் வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையில் வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விதி **5**, கூறு (viii)-இல் மேற்படி கடைகள் மற்றும் கட்டிடங்களை மதுக் கடைகள், இறைச்சிக் கடைகள் அல்லது மறுக்கத்தக்க வேறு வர்த்தகத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு குத்தகைக்கு விடக்கூடாது என விதித்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**2.** சட்டமியற்றும் அதிகார ஒப்பளிப்பு குழு (**13–**வது சட்டப்பேரவை) **11–**வது அறிக்கையில், ''மறுக்கத்தக்க வேறு வர்த்தகத்திற்கு அல்லது வியாபாரத்திற்கு'' என்பதற்கு பின்னர் ''இந்து சமய உணர்வுகளுக்கு மாறான'' என்ற வாசகத்தை சேர்க்கலாமா என்பது குறித்து பரிசீலிக்குமாறு பரிந்துரைத்துள்ளது. குழுவின் பரிந்துரை அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதன்படி விதியில் உரிய திருத்தம் மேற்கொள்ள முடிவு எடுத்துள்ளது.

**3.** இந்த அறிவிக்கை மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**அபூர்வ வர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU